உள்ளாட்சித்துறைத் தேர்தல்கள்

* 132. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்தல் கமிஷன் மாநிலங்களிலுள்ள உள்ளாட்சித் துறைத் தேர்தலை நடத்தும் பொறுப்பையும் தன்னிடத்திலே ஒப்படைக்க வேண்டு மென்று பரிந்துரை செய்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இதற்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : இரண்டு மாதங்களுக்கு முன்னால் இந்தியத் தேர்தல் ஆணைக் குழு முதன்மைத் தேர்தல் ஆணையாளர் செய்தி நிருபர்கள் கூட்டத்தில் பல மாநிலங்களில் உள்ள சட்டமன்ற மேலவைகளில் காலியாக உள்ள இடங்களைக் குறிப்பிட்டு, அவைகள் ஏன் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று சொல்லிவரும்போது உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தல்களைத் திறமையாகவும் முறையாகவும் நடத்துவதற்கு தேர்தல்களை நடத்தும் பொறுப்பை தேர்தல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கலாம் என்று சொன்னதாகச் செய்தித் தாள்களில் வந்தது. குறிப்பாக இந்தியன் எக்ஸ்பிரசில் அது வந்தது. இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தேர்தல் கமிஷன் மாநிலங்களிலுள்ள உள்ளாட்சித் துறைத் தேர்தலையும் தன்னிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்யவில்லை என்று இங்கே தெரிவித்தார்கள். திரும்பவும் இதுகுறித்து இந்த அரசு பரிசீலனை செய்து இந்தியத் தேர்தல் ஆணைக் குழு முதன்மைத் தேர்தல் ஆணையாளர் அப்படி செய்தி நிருபர்கள் கூட்டத்தில் செய்தி வெளியிட்டார்களா என்பதைத் தெரிந்து அதற்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5, 6, 8 தேதிகளில் பனாஜியில் (கோவா) நடந்த தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மாநாட்டில் இந்திய தேர்தல் ஆணைக் குழு முதன்மைத் தேர்தல் ஆணையாளர் தமது வரவேற்புரையில் பல மாநிலங்களில் உள்ள சட்டமன்ற மேலவைகளில் காலியாக உள்ள இடங்களைக் குறிப்பிட்டு, அவைகள் ஏன் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று சொல்லிவரும்போது, உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தல்களைத் திறமையாகவும் முறையாகவும் நடத்துவதற்கு தேர்தல்களை நடத்தும் பொறுப்பை தேர்தல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கலாம் என்று தாம் முடிவிற்கு வந்ததாகக் குறிப்பிட்டார்.

1981 மார்ச் 10]

அம் மாநாட்டின்போது இன்னுமொரு தருணத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை ஒரு நிர்வாக இயந்திரத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று தேர்தல் ஆணைக் குழுவின் கருத்தை ஒரு தலைமைத் தேர்தல் அதிகாரி பாராட்டிப் பேசியிருக் கிறார். தேர்தல் ஆணைக் குழு அனுப்பிய கருத்தினையே தலைமைத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டிருக்கலாம். என்ன கருத்தை தேர்தல் ஆணைக்குழு மைய அரசுக்குத் தெரிவித்தது என்ற விபரம் இல்லை. நான் குறிப்பிட்டது எந்தத் தகவலும் மத்திய அரசிடமிருந்தோ, தலைமைத் தேர்தல் ஆணையாளரிடமிருந்தோ செய்த் குறிப்பாகவோ, கடிதமாகவோ வரவில்லை. அப்படி வந்தால்தான் நாம் நம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் வரும். அப்படிப்பட்ட செய்தியோ; கடிதமோ நமக்கு வரவில்லை. அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: நம்முடைய மாநிலத்திலிருந்து சென்ற தலை மைத் தேர்தல் அதிகாரி இதற்கு என்ன பதில் சொன்னார்? 2 வருடங்கள் வரை உள்ளாட்சித் துறைத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கக்கூடிய உள்ளாட்சித் தேர்தல்களை தேர்தல் கமிஷனிடம் ஒப்படைக்க வேண்டு மென்ற கருத்து அங்கே வெளியானதாகச் செய்தித் தாள்களில் படித்தேன். அந்த அடிப்படையில் தான் நம்முடைய தேர்தல் அதிகாரியும் கருத்து வெளி யிட்டார்களா? அப்படிப்பட்ட அறிக்கையை நம்முடைய தலைமைத் தேர்தல் அதிகாரி அங்கே சமர்ப்பிக்காவிட்டால், அதுபற்றி அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்களா என்பது பற்றிய தகவல் நமக்குத் தரப்படவில்லை. இந்தியத் தலைமைத் தேர்தல் கமிஷனர் அப்படிப்பட்ட கருத்தினைத் தெரிவித் திருக்கிறார். கருத்துக்கள் அங்கே பரிமாறப்பட்டன. ஒவ்வொரு மாநிலத் திலிருந்து சென்ற தலைமைத் தேர்தல் அதிகாரிகளும் தங்களுடைய கருத்துக் களைப் பரிமாறியிருக்கிறார்கள். நம்முடைய தேர்தல் கமிஷனர் இது கொள்கை பற்றிய பிரச்சினை என்று சொல்லியிருக்கிறார். உள்ளாட்சித் துறைத் தேர்தலை நடத்துகின்ற பொறுப்பு மாநில அரசிடமே இருக்கலாமா அல்லது இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவிடமே இருக்கலாமா என்பது கொள்கைப் பிரச்சினை. அதுகுறித்து அரசு முடிவு எடுத்த பிறகு தான் செய்ய முடியும். அப்படிப்பட்ட கருத்தினைத் தான் தெரிவித்திருக்கிறார். மத்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தலைமைத் தேர்தல் கமிஷனரிடமிருந்தோ நமக்கு எந்தவிதமான செயற் குறிப்பும், கடிதமும் வரவில்லை. அப்படி வந்தால், நமக்குச் சாதகமாக இருக்குமா, மாநில உரிமையைப் பாதிக்காத

அளவுக்கு உரிமையை நிலைநாட்டத் தக்க அளவுக்கு இருக்குமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 10-40)

திரு. ஆ. நல்லசிவன் : நகராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையை நம்முடைய அரசு சரிவரச் செய்ய முடியாததால், அதையும் மத்திய அரசுக்குக் கொடுக்கும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதை அரசு தவிர்க்குமா? 'நீங்கள் நடத்தாவிட்டால், உங்களால் நடத்த முடியாவிட்டால், நாங்கள் நடத்துகிறோம்' என்ற அளவுக்கு இன்றைக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த முடியாததால் அல்ல, அதற்குரிய சூழ்நிலை ஏற்படாமல் தான் ஒத்திப் போடப்பட்டு வருகின்றன. இந்த நிலைமை நம்முடைய மாநிலத்திலேதான் என்றல்ல. இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களிலேயும் 10, 12, 15 ஆண்டுகள் என்ற அளவுக்குத் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துத்தான் இப்படிப்பட்ட கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள். வெகுவிரைவில் இந்தத் தேர்தலை நடத்தலாம் என்ற நிலை இருப்பதால், இந்தக் குறைபாடுகள் போக்கப்படுவதற்கு வழியிருக்கின்றது.

குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி.

***133. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் உள்ள குற்றவியல் தலைமை உதவியாளர் பதவியை, பிற மாவட்டங்களில் உள்ளது போல் துணைத் தாசில்தார் நிலைக்கு உயர்த்துகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் இது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை வெளியிடப்படும்.